# இந்தோனேஷியாவில் 4 நீதிபதிகள் கைது

Registered as a Newspaper in Ceylon ** விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49

மலர் 9
போன் 889

National Tamil Daily

இதழ் 91
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க சித்திரை 30 ஸபர் 2 சனிக்கிழமை [13-5-67]

ஜாகர்த்தா, மே 12

இந்தோனேஷியாவில் நான்கு நீதிபதிகள் கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஜாகர்த்தா பிரதம நீதிபதியும் ஒருவராவார். இந்தோனேஷியாவில் சீனர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதில் இந்த நீதிபதிகள், அவர்களிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு அவர்களுக்குச் சார்பாக தீர்ப்புக்கூறியதாக கூறப்பட்ட புகார்களின் மீதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

## இப்படியும் ஒரு சலுகை

சென்னை, மே. 13

இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தாய்நாடு திரும்பும் இந்திய வம்சாவழியினரில் எட்டாம் வகுப்பு அல்லது எட்டாம் வகுப்புவரை படித்த பெண்களுக்கு இலவசமாக எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுத வாய்ப்பளிக்கப்படும்.

பர்மாவிலிருந்து திரும்பும் இந்திய வம்சாவழியினருக்கு மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம், தண்டகாரண்யம் ஆகிய இடங்களில் விவசாயச்செய்கைக்கு ஆளுக்கு ஐந்து ஏக்கர் நிலமும் ஆளுக்கு 850 ரூபாயும் கொடுக்கப்படவிருக்கின்றது.

# 'இரட்டை அங்கத்தவர் தொகுதிமூலம் பிரச்னை தீரும்'

## தனிவாக்காளர் பட்டியல் கோரிக்கைக்கு மாற்றம்

### பிரதமரின் புதிய திட்டம்

கொழும்பு, வெள்ளி

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையர்களாகப் பதிவு செய்யப்பட்டு இலங்கைப் பிரஜாவுரிமைபெறும இந்திய வமசாவழியினரை தனிவாக்காளர் ஜாபிதாவில் வைக்க வேண்டுமென்ற எதிர்க்கட்சியினரின் யோசனைக்குப் பதிலாகஇரட்டைஅங்கத்தவர் தொகுதிகளை உருவாக்கலாம என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைப் பிரஜைகளாகும் இந்திய வம்சாவழியினர் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கும், அவர்களையும் பொது வாக்காளர் ஜாபிதாவில் சேர்த்தால் மலைநாட்டில், கண்டிப்பகுதி மக்களுக்கு பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் குறைந்துவிடுமென அஞ்சுவதற்கு இடமில்லாமல் மலைநாட்டு பெரும்பான்மைச் சமூக மக்களுக்கு பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் கிடைக்கவும் இரட்டை அங்கத்தவர் தொகுதிதான் தகுந்ததெனப் பிரதமர் தம்மைச் சந்தித்த சில தூது கோஷ்டியினரிடம் தெரிவித்திருக்கிறார்.

இரட்டை அங்கத்தவர் தொகுதிமுறை இலங்கையில் கொழும்பு, பதுளை, கிழக்கு மாகாணம் ஆகிய இடங்களில் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறதென்றும் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

இரட்டையர் தொகுதிகள் அமைப்பதன்மூலம் இலங்கைப் பிரஜைகளாகும் இந்திய வம்சாவழியினர் தமது நலனைப் பாதுகாத்துக்கொள்ளவும் இதேசமயம் மற்றவர்களும் தமது நலனைப் பாதுகாத்துக்கொள்ளவும் வழியிருக்கும் என பிரதமர் கருதுகிறார்.

வியாபாரிகளின் நண்பன்!

சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

குமரி முதல் கிழவி வரை
குமரன்முதல்கிழவன்வரை
பாவிப்பது இதுவேதான்!
எங்குமே கிடைக்கும்!!

## யாழ்ப்பாணத்தில் திடீர் மழை

யாழ்ப்பாணம், சனி

நேற்றுமாலை யாழ்நகரிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் கடும்மழை பெய்தது.

(16-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசுத் தலைவர்கள் பிரதமரை சந்திப்பர்?

கொழும்பு, சனி

தமிழரசுக் கட்சியின் பார்லிமெண்ட் குழு இம்மாதம் 18-ம் திகதி கொழும்பில் கூடவிருக்கின்றது. அன்றையதினம் இரவே தமிழரசு எம். பி. கள் பிரதம மந்திரியை சந்திப்பார்கள் என்றும் பிரதம மந்திரியிடம் மாவட்ட சபைகள் மசோதா பற்றி விளக்கம் கோருவார்கள் என்றும் அறியப்படுகின்றது.

அதேசமயம் தமிழரசுக் கட்சியின் சார்பில் நல்லூரில் விரைவில் பிரசாரக் கூட்டமொன்று நடைபெறவிருப்பதாகவும் அக்கூட்டத்தில் மாவட்ட சபைகள் சம்பந்தமான உண்மையான நிலைமையை அவர்கள் பொது மக்களுக்கு விளக்கிக் கூறுவார்கள் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.

## இந்தியமக்கள் ஐக்கியத்தில் அசைக்கமுடியாதநம்பிக்கை

### டாக்டர் ராதாகிருஷ்ணனின் பிரியாவிடைச் செய்தி

புதுடில்லி, மே 12

இந்தியமக்கள் தமதுபிரச்னையைத் தீர்த்துக்கொள்வதில் ஒற்றுமையுடனிருப்பார்கள் என்பதில்தாம் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்டிருப்பதாக டாக்டர் ராதாகிருஷ்ணன் இன்றுஒரு செய்தியில்கூறினார்.

ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிச்செல்லும் டாக்டர் ராதாகிருஷ்ணன் இந்தியமக்களுக்கு வானொலிமூலம் விடுத்த செய்தியிலேயே இந்தக்கருத்தைக்கூறினார்.

இந்தியமக்களின் அடிப்படைஐக்கியஉணர்ச்சி1962 65ம் ஆண்டுகளின் போது வெளியாகியது என்றும் அந்தக் கட்டுப்பாட்டு உணர்ச்சி தொடர்ந்தும்இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அரசியல் வேறுபாடுகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டுநாட்டின் பொது நன்மைக்காக யாவரும் பாடுபட முன்வர வேண்டுமென்றும் ஒற்றுமையை தத்துவ ரீதியாக அன்றி நடைமுறையில் இந்திய மக்கள் சாத்தியமாக்குவார்களென்றும் அவர் கூறினார்.

சீன, பாகிஸ்தான் தகராறு பற்றிக் குறிப்பிட்டு அவை இன்னும் தீர்க்கப்படவேண்டியவையென்றும் அண்டை நாடுகளுடன் இந்தியமக்கள் நட்புறவுடன் இருக்கவே விரும்புகிறார்களென்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி பதவிக்குதெரிவு செய்யப்பட்டிருக்கும் டாக்டர் சாகிர் ஹுசேனுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் பாராட்டுத் தெரிவித்தார்.

அறிவித்தல்

யாழ்ப்பாணம், மின்சாரநிலையவீதி, 27-ம்இலக்க 'குமாரசாமி' கட்டிடத்தில், புதியபஸ் நிலையத்துக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருக்கும் எமது புதிய கிளை ஸ்தாபனத்துக்கு அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. வி. பாட்

'ஷெல்' மார்க் அலுமினியப் பாத்திரங்கள் தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும் 1770

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

திருவருள் உணர்ச்சி நமக்கு ஏற்பட்டதும் நமது மனம் பரிசுத்தமடைந்து, யாரிடமும் வெறுப்புக் கொள்ளாமல் இருப்போம். எல்லா உயிர்களிடத்தும் நமக்கு அன்புதததும்பும். முன் என்றும் இல்லாதபடி, நமக்குள் சொல்ல முடியாத ஆனந்தமிருக்கும்.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு
சித்திரை 30மீ உ (13-5-67)


## நல்ல அறிகுறி

நாட்டின் இன்றைய பிரச்னைகளுக்கெல்லாம் மூலகாரணமான மொழிப் பிரச்னைக்கு ஒரு சுலபமான அமைதியான தீர்வு காணக்கூடிய நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன. ஆயினும் கட்சி நலன்களும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளும் அடுத்ததேர்தலில்வெற்றி பெறுவதற்கு சுலபமான வழியை அடைத்துவிடலாமா என்ற யோசனையும் மொழிப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கான வழி தெரிந்தும் துரித முயற்சி மேற்கொள்ளாது தடுத்து வருகின்றது என்று கருத இடமுண்டு.

கல்விவெள்ளை அறிக்கை மீது ஜனப் பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற விவாதத்தில் தமிழரசுக் கட்சிச் செயலாளரும் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், இந்தியாவிலுள்ளது போன்ற மும்மொழித் திட்டயோசனையை இங்கும் பின்பற்றலாமென அவர் தெரிவித்தார். தாய்மொழியுடன் ஆங்கிலம் இரண்டாவது கட்டாய பாடமாகவும் சிங்களம் அல்லது தமிழ் மூன்றாவது மொழியாகவும் படிப்பிக்கலாமென அவர் சொன்னார். அதாவது சிங்களப் பிள்ளைகள் தமிழையும், தமிழ்ப் பிள்ளைகள் சிங்களத்தை மூன்றாவது மொழியாகவும் கற்கலாமென்பதைத் திரு. அமிர்தலிங்கம்விளக்கிக்கூறினார். இதைஅன்று யாரும் ஆட்சேபிக்கவில்லை.

1956-ம் ஆண்டின் பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய கருத்தில் திரு. அமிர்தலிங்கத்தின் யோசனை பெரிய மாற்றத்தையே குறிப்பதாக இருந்தது. இதையே செனட்சபையில் பின்னர் பேசிய செனட்டர் நடராசாவும்' வலியுறுத்தியிருந்தார். சமீபத்தில் வலப்பனை எம். பி. யும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகருமான திரு. டி. பி. ஹெரத் பேசுகையில் ஆங்கிலம் தேவையில்லையென்றும் சிங்களப் பிள்ளைகள் தமிழையும் தமிழ்ப்பிள்ளைகள் சிங்களத்தையும் படிக்கலாமென்று கூறியிருந்தார். இதுவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கொள்கையில் மொழிவிஷயத்தில் ஏற்பட்டுள்ள பெரியமாறுதல் என்று கொள்ளவேண்டும். எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. பிரின்ஸ் குணசேகராவும் சபையில் இதற்கு முன் பல தடவைகளிலும் தமிழ் மொழியைத் தாங்கள் வெறுக்கவில்லையென்றும் ஆங்கிலம் அந்நியமொழியென்றும் அதையே வெறுப்பதாகவும் கூறியிருக்கிறார். சென்ற வாரம் முல்லைத்தீவில் பொதுக்கூட்டத்தில் பேசிய தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதனும் தமிழர்கள் சிங்களத்தை மூன்றாவது மொழியாகப் படிக்கலாம் என்று கூறினார். ஆக, சிங்களத்தை படிக்கக்கூடாது என்று கூறியவர்கள் மத்தியிலும் தமிழ் மொழிக்கு இந்த நாட்டில் இடமே இல்லை என்று கூறியவர்கள் மத்தியிலும் மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இருதரப்பினரும் ஓரளவு ஒருமித்த கருத்தைக் கொண்டு வருகின்றனர். தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தமிழ் வேண்டாமென்றோ, சிங்களம் படிக்கக்கூடாதென்றோ கூறுவார்களென எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆங்கிலம் அவசியமென்பதிலும் அவசியமில்லை என்பதிலும் கருத்துவேற்றுமை இருக்கிறது. ஆங்கிலத்தை இஷ்ட பாடமாக்குவதன் மூலம் இப்பிரச்னையைத் தீர்க்கலாம். ஆங்கிலம் ஒரு பிரச்னையாக இருக்க முடியாது. சிங்கள மக்கள் தமிழையும் தமிழ்மக்கள் சிங்களத்தையும் இஷ்ட பாடமாகவாவது கற்பதற்கு அரசியல் கட்சிகளுக்கு இடையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டுவிட்டால் இந்நாட்டின் பல பிரச்னைகள் தீரும்: தேசிய ஐக்கியமும் ஏற்படும். இதற்கான நல்ல அறிகுறி தோன்றியுள்ளது. சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் உருவாக்க அரசியல் கட்சித் தலைவர்களே பெரிதும் மக்கள் தூண்டவேண்டும்.

மாவட்டசபைகள் கருத்தரங்கு

# "மாவட்டசபைகள் வந்தேயாக வேண்டும்"

ஒன்றுக்கு மேற்பட்ட இன மக்கள் வாழுகின்ற எந்தநாட்டிற்கும் ஒற்றையாட்சி முறை ஒருபோதும் பயனளிக்காது. இது நடைமுறையிற் கண்ட உண்மை. பெரும்பான்மைப்பலம் பொருந்திய எந்த ஓர் இனமும் சிறுபான்மையினரை நசுக்கவே முற்படும். பிரதேசம், மொழி, கலை, கல்வி ஆகிய ஒவ்வொரு துறைகளிலும் சிறுபான்மையினம் தனது போராட்டத்தை நடத்தித்தான் உரிமைகளைப் பெறவேண்டியிருக்கும். இலங்கையில் இப்போது இதனை நடைமுறையிற் காண்கிறோம்.

இந்நிலையை ஓரளவுக்காவது மாற்றியமைக்கவேண்டுமானால் மாவட்டசபை நிச்சயம் வந்தேயாகவேண்டும். பிராந்திய சுயாட்சியில் தன் தேவைகளைப் பூர்த்திசெய்வதில். ஒற்றையாட்சி முறையைப்போல் அவ்வளவு சிரமமும், கஷ்டமும் ஏற்படாதென்பது திண்ணம். மேலும் குறிப்பிடப்பட்ட ஒரு கட்சியின் கொள்கை இம்மசோதா என்பதற்காக அதில் அடங்கியுள்ள நல்ல திட்டங்களை வேண்டுமென்றே எதிர்ப்பது, எமக்கு நாமே கல்லறை தோண்டுவதற்குத்தான் ஒப்பாகும். எந்தக் கட்சியாக இருப்பினும் நல்லவைகளைப் பாராட்ட வேண்டியது ஒவ்வொரு தமிழனதும் தலையாய கடமையாகும்.

புதியதோர் பிரச்னையும் இங்கு இடம்பெறுகிறது. மாவட்டசபை மசோதா மூலம் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில்தான் தமிழ் மக்கள் அடைக்கப்படுவார்கள். ஏனைய ஏழுமாகாணங்களில் அவர்கள் நடமாடவே முடியாத சூழ்நிலை ஏற்படும் என்றவொரு தப்பபிப்பிராயம் இங்கு நிலவுகிறது. இது முற்றிலும் தவறு. மாவட்டசபை மசோதாவல்ல, சமஷ்டியாட்சியேவந்தாலும், இது ஒரே நாடாக இருக்கும் வரை, இத்தீவின் எந்த இடத்திலும், எந்த மூலை முடுக்குகளிலும் சரிநிகர் சமானமுடன் சுதந்திரமாக நடமாட இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையுண்டு. எந்தச் சக்தியும் இதனைத் தடுத்து நிறுத்த முடியாது. அண்டை நாடான இந்தியாவில் மொழிவாரி ராஜ்யங்களாக சமஷ்டியமைப்பில் பிளவுபட்டு மாகாண சுயாட்சி நடைபெற்றுவருதல் யாவருமறிந்ததே. இப்படியிருக்க, அங்கு தமிழ்நாட்டில் உள்ளவர்கள் ஏராளமானோர், கன்னடம், ஆந்திரம், கேரளம், குஜராத், பம்பாய், டில்லி போன்ற பிற இடங்களில் தொழில் தேடிச் செல்லவில்லையா? நிரந்தரமாக அங்கு வாழவில்லையா? அதேபோன்று வடநாட்டில் உள்ள பலர் தமிழ்நாட்டில் தொழில் துறைகளில் ஈடுபடவில்லையா? ஆட்சியை இலகுவாக்க பல மாகாணங்களாகப் பிரித்து அரசு நடத்தினலும், இந்தியா ஒரே நாடுதான். சகலரும் இந்தியப் பிரஜைகள்தான். இலங்கையில் மட்டும் இது சாத்தியப்படாதென எந்த ஆதாரத்தைக் கொண்டு கூறுவது? ஐம்பது கோடி மக்கள் வசிக்கும் இந்தியாவில் கைகூடும் இம்முறை ஒரு கோடியே உள்ள இலங்கையில் சரிவராதா? பாரதத்தில் நடைபெறுவது சமஷ்டியாட்சி இங்கு வரப்போவதோ சமஷ்டியிலும் எத்தனையோ மடங்கு அதிகாரம் குறைந்த மாவட்ட சபைகளே!

"இம்மசோதாவினால் தமிழருக்குக்கூடிய உரிமைகள், சலுகைகள், அதிகாரங்கள் கிடைத்துவிடுமாதலால் இதனைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரல் கூடாது' என்று எதிர்க்கட்சிகள் பிரச்சாரம் செய்வதில் இருந்தே எமக்கு இதனால் நன்மை கிடைக்குமென்பது தெளிவாகிறது.

மதிவதனன்,
மன்னார்

ஃ ஃ ஃ

## இது தருணமல்ல

மாவட்ட சபைகள் முழுக்க நன்மை பயக்கும் என்று கூறிவிடமுடியாது. ஒருசில தீமைகளும் ஏற்படவே செய்யும். ஒரு சில தீமைகளுக்காக பல நன்மைகளை ஏற்படுத்தித்தரும் மாவட்ட சபைகளை வேண்டாம் என்று கூறுவது விவேகமல்ல.

தமிழர்களாகிய எம்மிடையே வேற்றுமைகள் இருந்தாலும், நாம் வேற்றுமையில் ஒற்றுமையை வளர்க்கவேண்டும். யார் குற்றினாலும் அரிசியாக வேண்டும். போட்டி, பூசல்களை ஏற்படுத்தி வேடிக்கை பார்க்க இதுதருணமல்ல.

—ச. ஸ்ரீரங்கன்,
இணுவில்.

## காத்திருப்போம்

ஜனநாயக ஆட்சியில் மாவட்டசபைகள் அவசியமென்பதில் சந்தேகமில்லை. இங்கிலாந்தில் "கவுண்டி கவுன்சில்" என்னும் சபைகள் பல முக்கியமான கருமங்களை செய்கின்றன. இந்தியாவிலும் 'பஞ்சாயத்துச் சபைகள்' மாவட்டசபைகள் போல் கருமமாற்றுகின்றன. காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா அரசாங்க சபைக் காலத்தில் கவுண்டி கவுன்சில் முறையைப்போல் இலங்கையிலும் சபைகள் அமைக்கவேண்டுமென்று கருதினர். அவர் அக்கருத்தை மனதில் வைத்திருந்தமையினாற்றான் ஓரளவு, தமிழரசாருடன் பிரதேசசபைகளின் அமைப்புக்கு ஒத்திருக்கவேண்டும்' துரதிஷ்டவசமாக சிலர் அவ்வொப்பந்தத்தை முறியடித்ததுடன் பிரதேச சபைகள் அமைப்பதையும் தடைபண்ணினர். கழுதை தேய்ந்து கட்டெறும் ஆனதுபோல் சமஷ்டி தேய்ந்து மாவட்டசபையாக மாறியது. ஸ்ரீமா ஆட்சி காலத்தில் விசேடமாக விவியன் குணவர்தன உதவி உள்ளூராட்சிமன்ற மந்திரியாகஇருந்தபோது மாவட்டசபைகள் பற்றி அதிகம் பத்திரிகையில் அடிபட்டது. எனினும் எதிர்பாராத மந்திரிசபையின் வீழ்ச்சி காரணமாக ஒன்றும் நடைபெறுமற்போயிற்று. மாவட்டசபைகளுக்கு கொடுக்கும் அதிகாரங்களும் கடமைளும் குறைந்தவையானல் அவற்றால் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு நன்மையும் இல்லை. அதேசமயத்தில் அவைக்கு கூடிய அதிகாரங்களும் கடமைகளும் கொடுபட்டால் வகுப்புவாத மனப்பான்மையுள்ள சிங்களவர் பெரும்பான்மையாக உள்ள மாவட்டங்களில் தமிழரின் நிலை எப்படி இருக்கும்? எப்படிப் பார்த்தாலும் தமிழருக்கு மாவட்டசபைகளால் அதிக நன்மையில்லை. ஆனல் ஜனநாயகத்தில் மக்களின் அதிகாரமே ஓங்கி இருக்கவேண்டும் என்ற காரணத்திற்காகவே மாவட்டசபைகள் இன்றியமையாதன வாகும். இதை எல்லாக் கட்சியினரும் சமூகத்தினரும் உணர்ந்து வரவேற்கும்வரை நாம் காத்திருப்பதே சாலச் சிறந்ததுவாகும்.

வே. கிருஷ்ணன்.
சுன்னாகம்.

## மீண்டும் விசேஷபதவி

புன்னாலைக்கட்டுவன் வெள்ளி

1960-ம் ஆண்டிலிருந்து ஆசிரியருக்கு விசேட பதவிகள் வழங்குவது. நிறுத்திவைக்கப்பட்டிருந்தது மிக விரைவில் மீண்டும் இப்பதவி வழங்கப்பட விருப்பதாகவும், சேவை முதிர்ச்சி, கல்வித்தகைமை ஆகிய வற்றின் அடிப்படையிலேயே இவ்விசேஷ பதவிகள் வழங்கப்பட விருப்பதாகவும் தெரிகிறது.

## இடமாற்றம

உடுப்பிட்டி, வெள்ளி

ஆனையிறவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. அ. இளையதம்பி இமையாணன், துவாளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாணத்திலுள்ள பழைய பஸ்காலையில்காரை நகர் பஸ்வண்டிகள் நிற்கும் இடத்துக்கு எதிரே ஒரு பொறிக்கிடங்கு இருக்கிறதென்பதை இத்தால் சகலமானபேருக்கும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்,

பஸ்போய்விடப் போகிறதே என்று அங்கலாய்த்துக்கொண்டுஅடித்துப்பதறி வரும்பிரயாணிகள் இந்தப் பொறிக்கிடங்குக்குள் ஒற்றைக்காலை விட்டு குத்துக்கரணம் அடிக்கும் வேடிக்கையைபார்த்துச் சிரிக்கும் நோக்கத்துடன்இதை இ. போ. ச. காரர் கிண்டி வைத்திருக்கிறார்களோ என்று நினைக்கப்படாது. அதைப்பற்றி, பாவம், அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது.

நிலாவரை, இடிகுண்டு இதுகளைப்போலஇந்தப்பொறிக்கிடங்கும் திடீரென்று ஒருநாள் தோன்றியது.இது நடந்து சுமார் ஆறு மாதங்களிருக்கும். முதலில் சிறிதாகத்தோன்றிய இத் துவாரம்இடிந்துஇடிந்துபெருத்து இன்று ஓர் ஆளையேவிழுங்கும்அளவுக்கு வந்துவிட்டது

நேற்று முன்தினம் பஸ்காலையில் பிச்சையெடுத்து பிழைக்கும் ஒரு சிறுமி இதற்குள் விழுந்தே விட்டாள். பக்கத்தில் நின்று கொண்டிருந்த பிரயாணிகள் ஓடிப்போய் அவளை அழ அழத் தூக்கி விட்டார்கள். பாவம் அவள் சேர்த்து வைத்திருந்த நாலைந்துசதங்கள் அந்தக் கிடங்குக்குள் விழுந்து தொலைந்து விட்டன. இன்னும் எத்தனை பேர் அதற்குள் தடுக்கி விழுந்தெழும்பினார்களோ நான் அறியேன். பட்டப்பகலில் இப்படியென்றால் இரவில் பஸ் பிடிக்க வருகிறவர்கள் என்ன பாடு படுகிறார்களோ!

இந்த நிலம் மாநகர சபைக்குச்சொந்தமானது. ஆகையால் அவர்களே கிடங்கை நிரப்பட்டும் என்று இ.போ.ச. நினைக்கிறது. இ. போ. ச. நிலத்தை உபயோகிக்கிறது, ஆகையால் அவர்களே அந்த வேலையைச் செய்யட்டும் என்றுமாநகர சபை நினைக்கிறது போலும்.

வீட்டுக் கூரை ஒழுகினால் கூலிக்கு குடியிருப்பவர் நினைப்பார் சொந்தக்காரர் திருத்தட்டுமேஎன்று. அதே போலசொந்தக்காரர் நினைப்பார் குடியிருப்பவர் திருத்தட்டுமே என்று. இப்படித் தானே இந்தப் பொறிக் கிடங்குப் பிரச்னையும்?

பழைய பஸ் காலையை இ. போ. ச. இன்னும் சில நாட்களுக்குள் காலி செய்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய பஸ் காலைக்கே எல்லா பஸ் வண்டிகளும் போய் விடுமாம். காலி செய்து கொண்டு போகிறவர்கள் தானே என்று நினைத்து மேற்படி கிடங்கைப் பற்றி இ. போ. ச. வும் கவலையீனமாயிருக்கிறது போலத் தெரிகிறது.

யாழ்ப்பாண தெரு வீதிகளில்எல்லாம் பெரிய கிடங்குகள் கிடக்கின்றன. மழை வந்தால் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொருசிறுகுட்டையாகிவிடும். கவலையீனமாகச்செல்லும் பாதசாரிகள்மீது மோட்டார் வாகனங்கள்யாழ். நகரின்அழுக்கு எல்லாவற்றையும் அள்ளிபு கொட்டிஅபிஷேகம் செய்துவிட்டுப்போகும். இதுபொதுவேலைப்பகுதி என்ற பி. டபிள்யூ. டி. காரர் செய்யும் கைங்கரியம்.

பொதுவேலைப் பகுதியும், மாநகரசபையும் இ.போ.ச. வும் ஒன்று சேர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி இந்தச்சிறு சிறுபிரச்னைகளை தீர்த்துக்கட்டினால் மிகவும் நன்றாயிருக்கும்.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுக்கடலில் அமெரிக்க - ரஷ்ய யுத்த கப்பல்கள் மோதல்

## இருதரப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டு; ஆட்சேபம்

### யு தாண்ட்; ஜோன்சன் கவலே

நியுயோர்க், மே 12

ஜப்பான் கடலில் அமெரிக்க நாசகாரி யுத்தக் கப்பல் ஒன்றும் சோவியத் நாசகாரி யுத்தக் கப்பலொன்றும் மோதிக்கொண்ட 24 மணி நேரத்துக்குள் மீண்டும் இரு தரப்பு யுத்தக்கப்பல் இரண்டு மோதிக்கொண்டன. இந்த யுத்தக்கப்பல்கள் மோதல்கள் சம்பந்தமாக இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளனர். சோவியத் யுத்தக்கப்பல் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அமெரிக்கரும் அமெரிக்க யுத்தக் கப்பல் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ரஷ்யரும் குற்றம்சாட்டியிருக்கின்றனர்.



ஜப்பான் கடலில் அமெரிக்க - சோவியத் யுத்தக்கப்பல்கள் மோதிக்கொண்டதால் தோன்றியுள்ள நிலே கண்டு ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கவலேயும், அச்சமும் தெரிவித்திருக்கிறுர். கப்பல்கள் மோதிக்கொண்ட சம்பவம் பற்றி அமெரிக்க அதிபர் திரு. ஜோன்சன் கவலே தெரிவித்துள்ளார்.

#### அமெரிக்கா ஆட்சேபம்

ஜப்பான் கடலில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க நாசகாரி யுத்தக் கப்பல் ஒன்றுடன் சோவியத் நாசகாரியுத்தக்கப்பல்ஒன்று மோதிக்கொண்ட 24 மணி நேரத்திற்குள்இரண்டாவது மோதல் ஏற்பட்டது. தங்கள் கப்பலுடன் நெருங்கிப் பிரயாணம்செய்ய வேண்டாமென்று தாங்கள் விடுத்த எச்சரிக்கையை சோவியத் யுத்தக்கப்பல்காரர் அசட்டை செய்ததாகவும் வேண்டுமென்றே வந்து தங்களுடன் மோதிக்கொண்டதாகவும் அமெரிக்கர் குற்றம்சாட்டியுள்ளனர். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 160 மைல் தொலேவில் சோவியத்யூனியனின் விளாடிவாஸ்டாக் துறைமுகத்தில் வடக்கு வியட்னுமுக்கு பண்டங்கள் ஏற்றுமதிசெய்யப்படுவதை அமெரிக்க விமானங்கள் வேவு பார்த்ததாகவும் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில்



ஈடுபட்டதாகவும் சோவியத் யூனியன் குற்றம்சாட்டியிருக்கிறது.

கப்பல் மோதல் சம்பவங்கள் பற்றி அமெரிக்கா, சோவியத்யூனியனுக்கும், சோவியத்யூனியன், அமெரிக்காவுக்கும் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றன.

'இச் சம்பவம் பாரதூரமான விளேவுகளே ஏற்படுத்தக்கூடும்' என்று யுதாண்ட் கவலேதெரிவித்தார்.

# ஆசிய பொருளாதார சபை அமைக்கலாம்

## இந்தியா யோசனே

கோலாலம்பூர், மே. 12

ஆசிய நாடுகளுக்கிடையேயான பொருளாதார ஒத்துழைப்புக்கும் பொருளாதாரவிருத்திக்கும் ஆசிய பொருளாதார சபையொன்றை அமைக்கலாம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. எம். ஸி. சக்ளாகோலாலம்பூரில் மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது யோசனே தெரிவித்தார்.

அபிவிருத்தியடைந்த ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் உட்பட இந்தியா, இலங்கை, நேபாளம் ஆகிய மற்றும் ஆசிய நாடுகள் அனைத்தும் அங்கம் வகிக்கக் கூடிய ஆசிய பொருளாதார சபையொன்றை அமைக்க இந்தியா தயாராக இருக்கிறதென்று திரு. சக்ளா தெரிவித்தார். சிறு நாடுகள்கொண்ட [illegible] பிராந்தியங்களே அமைக்கவேண்டுமென்பது தங்கள் நோக்கமல்லவெனினும் வர்த்தகம் பொருளாதார உறவை பரந்த அடிப்படையில் ஏற்படுத்தி சிறியநாடுகளும் பொருளாதாரத்தில் விருத்தியடையவேண்டுமென்பதே தங்கள் நோக்கமென்றும் திரு. சக்ளா கூறினுர்.

துங்கு அப்துல் ரஹ்மானுடன் திரு. சக்ளா நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது இந்தியாவுக்கும் மலேசியாவுக்குமிடையில் பொருளாதார தொழில்நுட்ப உதவிகளே அதிகரிப்பது சம்பந்தமாக உடன்பாடு ஏற்பட்டது. இந்தியாவில் உற்பத்தி செய்யும் விமானங்களே மலேசியா வாங்கிக்கொள்வதற்கு மலேசியாவுக்கு இந்தியா கடன் வசதியளிக்கவும் முன்வந்திருக்கிறது. மலேசிய விமானிகள் பயிற்சி பெறுவதற்காகப் பயிற்சி விமானம் ஒன்றையும் இரு கிளைடர் விமானங்களேயும் மலேசியாவுக்கு இந்தியா அன்பளிப்பாக வழங்கியிருக்கிறது.

வியட்னும் பிரச்னே, சீனு, அணுஆயுத பரவல்தடை ஒப்பந்தம்ஆகிய பிரச்னேகள் பற்றியும் திரு. சக்ளாவும் துங்கு அப்துல் ரஹ்மானும் கருத்துப் பரிமாறிக்கொண்டனர்.

---

## அண்ணு உதகை செல்கிறுர்

சென்னே, மே 12

இம்மாதம் 15-ம்திகதியன்று, தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை உதகமண்டலம் செல்வார்.

அங்கு 'உல்லாசப்பிரயாண வார' நிகழ்ச்சிகளே ஆரம்பித்துவைப்பார். 16-ம் திகதியன்று, அங்கு நடைபெறவிருக்கும் தெற்கு மண்டல ராஜ்ய மாநாட்டில் கலந்து கொள்வார். மற்றும் 16-ந் திகதியிலிருந்து 18-ம் திகதிவரை நடைபெறும் ஹரிஜன நல பழங்குடி நல மாநாடுகளிலும் அவர் பங்கு பற்றுவார்.

உதகமண்டலத்தில் நடைபெறும் தெற்கு மண்டல ராஜ்ய மாநாட்டில் தாமும் கலந்து கொள்ளவிருப்பதாக புதுச்சேரி முதல் மந்திரி திரு. பாரூக் மரைக்கார் தெரிவித்துள்ளார். அவர் அண்ணுவைச் சந்தித்துப்பல விஷயங்களேயிட்டுப் பேசுவார்.

---

## 7 உதவி மந்திரிகள் பதவிநீக்கம

லண்டன், மே 12

ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வதென்ற தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கத் தவறிய ஏழு பிரிட்டிஷ் பார்லிமெண்டரிக் காரியதரிசிகளே பிரதமர் வில்சன் பதவியிலிருந்து நீக்கம் செய்தார். மற்ருெருவர் தமது பதவியை ராஜினுமாச் செய்து கொண்டார்.

---

## "தளம் அமைக்க வேண்டாம்"

நியுயோர்க், மே 12

மொரிஷியஸ் தீவிலும் மற்றும் அதைச்சார்ந்த தீவுகளிலும் இராணுவத்தளம் அமைக்க முனையவேண்டாம் என்று பிரிட்டனே, ஐ. நா. குழு கேட்டுள்ளது.

---

## கவியரங்கு

சங்கானே, வெள்ளி

சங்கானேயில் நடைபெறவிருக்கும் திருக்குறள் மகாநாட்டில் கவியரங்கு சிறந்த நிகழ்ச்சியாக விளங்கும். திருக்குறளின் சில அதிகாரங்களே மையமாகவைத்து வள்ளுவர் கண்டவாழ்க்கை நெறிகளேக் கவிதை உருவில் ஆக்கி அரங்கேற்ற ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்கள் முன்வந்துள்ளனர்.

அம்பி, செ. கதிரேசபிள்ளே, வி. கந்தவனம், மஹாகவி, வித்துவான் க. கணபதிப்பிள்ளே, திமிலேத்துமிலன், கவிஞர் இ. நாகராஜன் முதலிய பல கவிஞர்களுடைய கவிதைகள் அரங்கேற்றப்படும். இக்கவிதை அரங்கிற்கு இரசிகமணி கனக செந்திநாதன் தலைமை தாங்குவார்.

இம்மா 22-ம் திகதி நடைபெறும் முதல் நாள் நிகழ்ச்சியின் போது இடம் பெறும்.

---

## காணிக் கச்சேரி

பூநகரி, வெள்ளி

பூநகரிக் காரிய திகாரிபிரிவிலுள்ள நெற்புலவு கி. மு. ச. விஸ்தரிப்புக் திட்டக் காணிக் கச்சேரி காரியாதிகாரியின் கந்தோரில் நடைபெற்றது.

---

### வியட்னுமில் இதேநிலே நீடித்தால்

# "சீன - அமெரிக்க யுத்தம் தவிர்க்கமுடியாது போகும்"

## யுதாண்ட் எச்சரிக்கை

நியூயோர்க், மே 12

''வியட்னுமில் இன்றுள்ள நிலேயே இன்னும் சிலகாலத்துக்கு நீடிக்குமாளுல் அமெரிக்காவுக்கும் சீனுவுக்குமிடையில் யுத்தம் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்'' என்று ஐ. நா. தலைமைக் காரியதரிசி யு தாண்ட் அச்சம் தெரிவித்திருக்கிறுர்.

வியட்னும் பிரச்னேயில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் முன்னேய முதலாம், இரண்டாம் யுத்தங்களில் சம்பந்தப்பட்டவர்கள். அந்த யுத்தங்கள் தொடங்குவதற்கு இரண்டொரு மாதங்களுக்கு முன் கொண்டிருந்த மனேநிலேயையே கொண்டிருக்கின்றனர்என்றும் யுதாண்ட் தெரிவித்தார்.

சீனுவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் யுத்தம் ஏற்பட்டால் சோவியத் யூனியனும் அதில் தலையிட்டு சீனுவுக்கு உதவியளிக்கக்கூடுமென்றும் சீன-ரஷ்ய பரஸ்பர பாதுகாப்பு உதவி ஒப்பந்தம் இன்னும் அமுலிலிருக்கிறதென்பதை மறந்துவிடக்கூடாது என்றும் யு தாண்ட் கூறினுர்.

### அமெரிக்கா நிறுத்தினுல்...

''வடக்கு வியட்னும் மீது குண்டுவீசுவதை அமெரிக்கா உடனடியாக நிறுத்திக்கொண்டால் வியட்னும் பிரச்னேக்குத் தீர்வுகாண்பதற்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் சில தினங்களுக்குள்ளேயே ஆரம்பமாகிவிடும்'' என்று கூறிய யு தாண்ட், இது தமது சொந்தக்கருத்து என்றும் வடக்கு வியட்னும் தம்மிடம் இவ்வித நிபந்தனே எதுவும் போடவில்லே யென்றும் கூறினுர்.

வியட்னும் பிரச்னேக்குத் தீர்வுகாண்பதற்கென தாம் வெளியிட்ட புதிய திட்டத்தை இருதரப்பினரும் நிபந்தனேயின்றி ஏற்றுக்கொள்ளாததால் அது பயனற்றுப் போய்விட்டதென்றும் யுதாண்ட் கூறினுர்.

### அமெரிக்க கருத்து

வியட்னும் நிலேமைபற்றி யு தாண்ட் தெரிவித்த கருத்தை தாங்கள் அப்படியே சரியென்று ஏற்றுக்கொள்ளவில்லே யென்றும் வியட்னும் பிரச்னேக்குத் தீர்வுகாணும் முயற்சியில் யு தாண்ட் கொண்டுள்ள ஆர்வத்துக்கு அவர் தெரிவித்த கருத்து ஓர் அறிகுறியெனக் கருதுகிறேம் என்று ஐ. நா. விலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு. ஆர்தர் கோல்ட்பர்க் தெரிவித்தார். வியட்னும் பிரச்னேக்கு சமாதானத் தீர்வுகாண ஆக்கபூர்வமான யோசனேகளே அமெரிக்கா தெரிவித்தபோதிலும் வடக்கு வியட்னும் அதற்கு எதிர்மாருன முறையில் நடந்துகொள்கிறதென்றும் திரு. கோல்ட்பர்க் கூறினுர்.

## 'அன்பளிப்புகள் ஏற்கமாட்டேன்'

### கேரள முதல் மந்திரி

திருவனந்தபுரம், மே 12

கேரள முதல் மந்திரி திரு. இ. எம். எஸ். நம்பூதிரிபாத் இனிமேல் தனக்கு வழங்கப்படும் அன்பளிப்புக்களே ஏற்றுக்கொள்வதில்லே என முடிவு செய்துள்ளார்.

தனக்குஅண்மையில் இரணகுளத்தில் வழங்கப்பட்ட படம்பிடிக்கும் கருவியொன்றை ஏலத்தில் விற்பனே செய்து அதன் மூலம் வசூலிக்கப்படும் பணத்தை பீகார் வரட்சி நிவாரண நிதிக்கு அனுப்பிவைக்கப்போவதாகவும் முதல் மந்திரி மேலும் தெரிவித்தார்.

நான் மந்திரியாய் இல்லாவிட்டால் எனக்கு இந்த அன்பளிப்புகள் வழங்கப்பட்டிருக்கமாட்டாதென்றும் ஆகையால் இதனே நான் இனிமேல் ஏற்றுக்கொள்வதில்லேயெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதைப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியினர் தமது மாணவரிடையே இலக்கிய உணர்வைத்தூண்டுமுகமாக சிறு கதைப்போட்டியொன்றைஅண்மையில்நடாத்தினர் மூன்று பிரிவுகளாக நடாத்தப்பட்ட இப்போட்டியில் சுமார் 125மாணவர்கள் கலந்துகொண்டனர். சு.வே. கவிஞர் கந்தவனம், பாமாராஜகோபால்ஆகியோர் நடுவர்களாகக்கடமை யாற்றினர். 3பிரிவுகளிலும் முறையே 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

மேற்பிரிவு: அ.கோபாலச் சந்திரநாயகன், இ. மகேந்திரராசா, க. விக்கிரமபாஸ்கரன்.

மத்தியபிரிவு: கி. ஜெயசுந்தரம், சி.சூரியகுமாரன், எஸ் ஜெயசுந்தரா.

கீழ்ப்பிரிவு: எஸ். பத்மநாதன் ஈ.மோகன்எஸ். மகேஸ்வரன்.

## றிமாண்ட்

சாவகச்சேரி. வெள்ளி

சாவகச்சேரி நகரசபை இராக்காவலாளியான பி. தாமோதரம்பிள்ளை நள்ளிரவில் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிசார் மீசாலை வாசியான எஸ். சின்னத்துரை என்பவரைக் கைதுசெய்து சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. வி.எம். குமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்து இது சம்பந்தமாக மேலும் சிலரைக் கைது செய்ய வேண்டியிருப்பதால் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிபதி அவரைஇம்மாதம் 13- ந்திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## பழைய மாணவர் கூட்டம்

புன்னாலைக்கட்டுவன் வெள்ளி

இம்மாதம் நடைபெறவிருக்கும் உரும்பராய் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கக் கூட்ட நிகழ்ச்சிகளில் பழைய மாணவருக்கும் தற்போதைய மாணவருக்குமிடையேஓர் உதைபந்தாட்டப் போட்டியும், கரபந்தாட்டப் போட்டியும் நடைபெறும். கலை நிகழ்ச்சிகளில் திரு. ஏ.ரி. பொன்னுத்துரையின் 'பிற்பகலிலே' என்னும் நாடகம் இடம் பெறும்.

## தமிழரசு.வா.மு. தீர்மானங்கள்

உரும்பராய், வெள்ளி

தமிழ்மொழி விசேஷ ஷரத்து தமிழ்ப்பகுதிகளில் நடைமுறைக்குவர, படிவங்களைத்தமிழில் நிரப்ப தமிழ் மக்களை ஊக்குவிக்க நடவடிக்கைஎடுப்பதென உரும்பராய் தமிழரசு வாலிபமுன்னணியின் நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விவசாயிகளுக்குவேண்டிய விவசாய உபகரணங்களை இலகுவில் அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வதென்றும் விவசாயிகளுக்கு வசதியாக காலை6-30மணிக்கு உரும்பராயிலிருந்து சுன்னாகத்துக்கு ஒரு பஸ்சேவைக்கு ஒழுங்கு செய்யவேண்டுமென்று இ.போ.ச. பிராந்திய முகாமையாளரை நேரில் கண்டு பேசுவதெனவும், வல்வைச்சம்பவத்தை விசாரிக்க ஒருகமிட்டிநியமிக்குமாறு பிரதமரைக்கேட்பதெனவும் கூட்டத்தில் மேலும் தீர்மானிக்கப்பட்டது.

## த.கா.வாலிப முன்னணி

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணியின் வருடாந்தப்பொதுக் கூட்டத்தில் சுகாதாரமந்திரி திருமதி விமலாகன்னங்கராவும் கல்முனை எம்.பி. காரியப்பரும் கலந்துகொள்வரர்களெனவும்கூட்டத்துக்கு திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமை தாங்குவாரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னணித் தலைவர் திரு. இராசக்கேரனும் போஷகர் புரக்டர் குணரத்தினமும் இதற்கான ஏற்பரடுகளைச் கவனித்து வருகின்றனர்.

## "மாவட்டசபை நாட்டை பிரிப்பது அல்ல"

### உடுவில் எம். பி. கருத்து

சுன்னாகம், வெள்ளி

"மாவட்டசபை மசோதாவையார்தான் எதிர்த்தாலும்அதைநிச்சயம் கொண்டு வந்தேதான் தீருவோம். மாவட்டசபை மூலம் நாட்டைப் பிரிப்பதென்பது அர்த்தமற்றது. அது நிர்வாகத்தைப் பரவலாக்குவதுமல்லாமல், அது இயங்குவதற்கு அரசாங்கம் பண உதவிசெய்யும். இது, பாராளுமன்றப் பிரதிநிதிகள், உள்ராட்சிமன்றத் தலைவர்கள், சிறுபான்மைத் தமிழ்ப்பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்டு இயங்கும்."

கலாஜோதி சனசமுக நிலைய 8-வதுஆண்டு நிறைவு விழா நடைபெற்றபொழுது உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசுகையில், சனசமுக நிலையங்கள் மீண்டும் ஸ்தல ஸ்தாபன அமைச்சின்கீழ் இயங்குவதற்கு தம்மாலியன்றவரை பாடுபடுவதாகவும் வாக்குறுதி அளித்தார்.

வலி வடக்கு காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக் பேசுகையில், கிராமங்களில்உள்ள குறைபாடுகளை கூடியளவுக்கு அரசாங்க உதவியை எதிர்பாராமல் சங்கங்கள் செய்ய முன்னிற்கவேண்டுமென்றும், அரசாங்கமும் தன்னாலியன்ற உதவிகளைச் செய்யும் என்றும், விளையாட்டுத் துறையில் வாலிபர்கள் ஈடுபடுவதற்கு ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் விளையாட்டுப் போதனாசிரியர்கள் நியமிக்கப்படவேண்டுமென்றும் கூறினார்.

தெல்லிப்பழை கிராமமுன்னேற்ற அதிகாரி திரு. சாம் வடிவேல் பேசுகையில்கூறியதாவது; சனசமுக நிலையங்கள் விவசாயத்திட்டங்களில் ஈடுபட்டு உணவு உற்பத்தியை அதிகரிக்க முயலுதல் வேண்டும், சிரமதானமூலம் தங்கள் தொகுதிக்கு வேண்டியவற்றை அதிதீவிரமாக முன்னின்று செய்தல் வேண்டும். இவற்றுக்கு அரசாங்கம் உதவிசெய்ய எப்பொழுதும் தயாராக இருக்கிறது.

திரு. ஆ. குலேந்திரம் பேசுகையில் சனசமூக நிலையங்கள் பெயரளவில் மட்டும் நின்றுவிடக்கூடாது என்றூர். கிராமங்களில் ஏற்படும் சிறு சிறு சச்சரவுகள் தொடங்கி பெரும் பிரச்னைகளைக்கூட தீர்த்து வைப்பதற்கு சமாதான சபைகளை நியமித்து செயலாற்றலாம் என்றும் அவர் சென்னூர். சிறுபான்மைத் தமிழரின் நலன் உரிமைகருதி 1956-ம் ஆண்டில் எமது ஸ்தாபனங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு காலஞ்சென்ற கலைப்புலவர் நவரத்தினம் போன்ற பெரியார்கள் ஆற்றியசமூக சேவை நினைவில் நிறுத்தப்பட வேண்டியது. அவரைநாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. தொடர்ந்து சமூக ஏற்றத்தாழ்வுப் பிரச்னைக்கு தீர்வுகாண அரசாங்க அதிபரும், இந்துமாமன்றமும் எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டுகின்றேம். எமது சமூகம் முன்னேற தீண்டாமை ஒழியவேண்டும்". என்றும்அவர் சொன்னூர்.

திரு. சி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், திருவாளர்கள் ச. முத்துலிங்கம், சி. சண்முகலிங்கம், அந்தோனிப்பிள்ளை, எஸ். செல்லத்துரை, எஸ். கணபதிப்பிள்ளை, இ.பொன்னம்பலம், சி. கந்தையா ஆகியோரும் பேசினர்.

## மகோற்சவம்

சங்கானை, வெள்ளி

சங்கானை இலுப்பைத்தாள் முருகமூர்த்தி, சித்தன் கேணி மகா கணபதி ஆகிய கோவில்களின் வருடாந்த உற்சவம் நாளை 13-ம் திகதி சனிக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும். இதைத் தொடர்ந்து பத்தாம்நாள் தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## ஆவணியில் இசைவிழா

### நுண்கலைக் கழகம் தீர்மானம

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் நுண்கலைக் கழகத்தின் இசை விழா இவ்வருடம்ஆவணிமாதமுற்பகுதியில்வண்ணை ஸ்ரீவெங்கடேசவரதராஜப் பெருமாள் கோயில் முன்றலில் அமைக்கப்படும் அலங்காரப்பந்தலில் நடைபெறவிருக்கிறது.

நுண்கலைக்கழகத்தின் வருடாந்தக்கூட்டம் சென்ற புதன்கிழமை அதன் தலைவர் திரு. து. சீனிவாசகம் தலைமையில் பெருமாள் கோவிலில் நடைபெற்றபோது இசைவிழாவை ஆவணிமாத முதல்வாரத்தில் ஐந்துதினங்களுக்கு நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவில் திரு. ஈ. சபாலிங்கம் போஷகராகவும், திரு. து சீனிவாசகம், தலைவராகவும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர். இணைக்காரியதரிகளா திரு பி. காசிலிங்கமும் திரு செ. சுந்தரலிங்கமும் தெரிவு செய்யப்பட்டதுடன் தனதிகாரியாக திரு. ஆர். லோகநாதனும் நிர்வாகசபைஅங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ் நாட்டிலிருந்து இசையாளர்கள் இங்குவருவதற்குள்ள தடைகளை நீக்குவதற்கு அரசாங்கத்தைக் கோரவேண்டுமென்று திரு. க. சுப்பிரமணியம் கொண்டுவந்த பிரேரணையும் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## பிரிவுபசாரம்

பொல்காவலை, வெள்ளி

பொல்காவலை பொலிஸ் நிலைய அதிகாரியாகவிருந்த திரு.எஸ்.கணேசன் அளவை பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார். இடமாற்றத்தையொட்டி நண்பர்கள் திரு. கணேசனுக்கு பிரிவுபசாரமொன்றை நடாத்தினர்.




அதிக வனப்பும்

எழிலும்

லாவண்ணியமும்

பெற

பொன்ட்ஸ்

வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட

பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 230 A நாவலர் வீதி திரு. தில்லையம்பலம் நவரெத்தினமவர்களின் கடையில் 1-1-66க்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவற்றை 6-6-67 முற்பகல் 9-30 மணி தொடக்கம் கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏல விற்பனவாளர்.
1779


**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30. 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
**பெண்ணே நீ வாழ்க!**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
**பெரியஇடத்துப் பெண்**

REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
James Stewart
Cindy Carol
in
**DEAR BRIGITTE**
இரவு 9-45
சந்திரலேகா

**MANOHARA**
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
GREGORY PECK
DIANE BAKER
in
**MIRAGE**


## 'கம்யூனிஸ்ட் சஞ்சிகைகளை குறைக்கவும்'

பலாலி, வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டினசபைப் பொது வாசிகசாலையில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் அதிக இடம் பெறுவதை எதிர்த்துப் பட்டினசபை வரியிறுப்பாளர்கள் எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இக் கட்சிப் பத்திரிகையைக் குறைக்கும் படி கோரும் ஒரு மகஜரையும் தயாரித்து வருகின்றனர். இம்மாத இறுதியில் இம்மகஜர் பட்டின சபைத் தலைவரிடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

**சனி 13 - 5 - 67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 வயலின் — எஸ். சோமஸ்கந்தசர்மா, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம் — மாதர்நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைச்சித்திரம் 'குறிஞ்சி' - எழுதியவர் வி. என். பாலசுப்பிரமணியம், 10-00 நேயர்விருப்பம்.

## 4 குற்றங்களுக்கு ரூ. 375 அபராதம்

சாவகச்சேரி, வெள்ளி

கிளிநொச்சி சாலிபாமைச் சேர்ந்த கந்தையா இளையதம்பி என்பவர் உழவு யந்திரத்தை கவலையீனமாக ஓட்டிச் சென்று நா. பரராசசிங்கம் என்பவருக்குக் காயம் ஏற்படுத்தியதாகவும், உழவு யந்திரத்திற்கு லைசென்ஸ் இல்லாது வீதியில் ஓட்டியதாகவும் சாரத்திய லைசன்ஸ் இல்லாது அதனை ஓட்டியதாகவும் எல்லாமாக நாலு குற்றச்சாட்டுகளின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணை செய்த கிளிநொச்சி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா முதல் குற்றச்சாட்டிற்கு ரூபா 75ம் அல்லது 4 வாரச் சிறையும், 2-ம் குற்றச்சாட்டிற்கு 50 ரூபா அல்லது மூன்று வாரச் சிறையும், 3-ம் குற்றச் சாட்டிற்கு ரூபா 50 அல்லது மூன்று வாரச் சிறையும், 4-ம் குற்றச்சாட்டிற்கு ரூபா 200ம் அல்லது 6 வாரச் சிறையும் விதித்தார்.

## வைத்தியஅதிகாரி வருவார்

நயினாதீவு, வெள்ளி

நயினாதீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கு வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்கும்படி நயினாதீவு கிராமசபைத் தலைவர் திரு. சி. க. தம்பையா சுகாதார மந்திரியையும் தமிழ் எம். பி.க்களையும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இம்மாதம் 15-ந் திகதி வைத்திய அதிகாரி நியமிக்கப்படுவார் என தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## றிமாண்ட்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வராசா ஜெயபாலன், எஸ். லெட்சுமிகாந்தன் ஆகிய இருவரும் கடந்த மாதம் 25-ந் திகதி இரவு பருத்தித்துறைப் பட்டினத்தில் கைக்குண்டு வீசி மூன்று பேருக்குக் காயம் விளைவித்ததாக, பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வி. செல்லையா அவர்களைக் கைது செய்து பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது மாஜிஸ்டிரேட் சந்தேக நபர்கள் இருவரையும் இம்மாதம் 21-ந் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## பதவி உயர்வு

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. சுப்பிரமணியம் மாவட்ட நீதிமன்றத்துக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பருத்தித்துறை நீதிமன்ற எல்லைக்குள் சமாதான நீதவானாகவும் கடமையாற்றி வருகிறார்.

## தியாகராசா கோஷ்டி வெற்றி

சுன்னாகம், வெள்ளி

மல்லாகம் கந்தசுவாமி ஆலயமுன்றலில் தியாகராசா கோஷ்டிக்கும், ஈஸ்வரதாஸ் கோஷ்டிக்குமிடையில் போர்த்தேங்காய் அடி போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் திரு. மு. தியாகராசா வெற்றி பெற்றார்.

## வரி விளம்பரம்

### தேவை

கைத்தறிகளில் வேலை செய்வதற்கு நன்கு பயிற்சி பெற்ற பிள்ளைகள் தேவை. பஸ், ரெயில் வசதியும், விடுதி வசதியும் உண்டு. நேர்முகப்பரீட்சைக்கு 14-5-67 / 15-5-67 காலை 9 மணிக்கும் பிற்பகல் 4மணிக்கும் இடையில் மாவிட்டபுரம் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகாமையிலுள்ள பிருக் பிரதர்ஸ் (PRAG BROTHERS) நெவு ஆலைக்கு சமூகமளிக்கவும். 1805

### வைத்தியம்

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### காணவில்லை

கூப்பன்

மு. பொ. இரத்தினம் என்பவருடைய கூப்பன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அருகாமையில் 12-5-67-ல் தவறி விழுந்துவிட்டது. கண்டெடுப்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும். 1806

## நூல்நிலையம

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி பட்டினசபையின் மத்திய நூல்நிலையப் புத்தக விநியோகப்பகுதி நெல்லியடிச் சுற்றாடலில் வசிக்கும் மாணவர்களின் வசதிக்காகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.


இரண்டாவது வெற்றி வாரம

கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]
விஜிதா [ஹட்டன்] வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தீவொளி [நுவரெலியா]

தென்னகமெங்கும் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.

**ரவிச்சந்திரன் - ஜெயலலிதா**
**ரங்கராவ் - நாகேஷ்**

ஆர். சரஸ்வதி,
மனோகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்

**குமரிப் பெண்**

இசை: எம். எஸ். விஸ்வநாதன் டைரக்ஷன்: ராமண்ணா




தலைவலி, தடிமல், டெங்குச் சுரம், காய்ச்சல், பல்வலி, இவற்றிலிருந்து துரிதமான, பாதுகாப்பான, வன்மையான நிவாரணம் தந்து, தசைநார் வலிகள் நோவுகளைத் தணிப்பது டிஸ்பிரின்.

டிஸ்பிரினின் கூட்டுப் பொருள்கள், நிச்சயமாகவே வன்மையான பாதுகாப்பான நிவாரணம் தந்திருக்கின்றன. அதனால் தான் உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிறார்கள்.

டிஸ்பிரின், முற்றாகக் கரைவதும் இரத்தோட்டத்தில் உடனே செறிவதுமாகையால், அதி துரித நிவாரணம் தருகிறது.

றெக்கிட் அண்ட் கோல்மன் தயாரிப்பு.




டிஸ்பிரின் பாதுகாப்பான துரித நிவாரணத்துக்கென விசேஷமாக உருவாக்கப்பட்டது.

RC 165


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ்

# "முருகேசுவை சுட்ட 1-ம் எதிரி என்னையும் துரத்தினர்"

## மூளாய் கொலைவழக்கு விசாரணை

யாழ்ப்பாணம். சனி

'1-ம் எதிரி கணபதி முருகேசுவை சுட்டுவிட்டு பொன்னன் வீடு நோக்கிச் சென்ருர். 'ஐயோ' என்று நான் குளறினேன். உடனே 1-ம் எதிரி என்னையும் துரத்தினுர்.

மூளாய் கொலை வழக்கில் சாட்சியமளித்த நன்னியன் மேற்கண்டவாறு கூறினுர். இவ்வழக்கு நேற்றுக்காலை பத்தாவது தினமாக வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 66-ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி சுப்பர் முருகேசுவை, சுப்பர் கணபதியும், கணபதி தெய்வேந்திரனும் கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் வி. இரகுபதி, புறக்டர் எஸ். குலநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜராளுர். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் தில்லையர் நியமிக்கப்பட்டிருந்தார்.

நன்னியன் மேலும் கூறியதாவது: 1-ம் எதிரி மாப்பாணு' என்று கூப்பிட்டதும், அது ஓர் ஆபத்தான குரல் என உணர்ந்தேன். நானும் என் மனைவி முத்தாச்சியும் படலைக்கு வந்தோம். 1-ம் எதிரி 'மாப்பாணு' என்று கூப்பிட்ட சத்தம் கேட்டுத்தான் படலைக்கு வந்தேன்.

வழ: ஒழுங்கையால் வெறுங்காலுடன் ஒடினல் சத்தம் கேட்குமா?- ஆம்.

வழ: 1-ம் எதிரி கூப்பிட்டதும் ஏதோ ஆபத்து நடக்கப் போவதாக நினைத்தீர்? - ஆம்

வழ: உமது வளவிற்கு பக்கத்தில் உள்ள ஒழுங்கைக்கு கல்லுப்போடவில்லை? ஆம்.

வழ: அந்த ஒழுங்கையால் செல்பவர்கள் சப்பாத்துப் போடுவதில்லை? -ஆம்.

நீதியரசர்: இடத்தைப் பார்க்க கோட்டார் வந்தபோது சப்பாத்து போட்டிருந்தார்கள் ?-ஆம்.

வழ: கோட்டார் ஒழுங்கையால் வந்தபோது சத்தம் கேட்டதா? நான் பார்த்துக்கொண்டிருந்தேன்

வழ: எதற்காக நீ விளக்குப் பிடிக்கப் போகவில்லை?- பயத்தினுல்.

விசாரணை இன்றுகாலை தொடர்ந்து நடைபெறும்.

---

## சிரமதான மூலம் வீதிதிருத்தல்

உடுப்பிட்டி, வெள்ளி

"சிரமதானம் ஒரு புனிதமான பணி. சிரமதான இயக்கத்தைச் சரிவரக் கடைப்பிடிப்பதின்மூலமே எமது தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியும்" என்று திரு. சு. கணபதிப்பிள்ளை அல்வை இந்துவாலிபர் சங்கத்தின் சிரமதான இயக்கத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினுர்.

நேற்று நடைபெற்ற இச் சிரமதானப் பணியில் சுமார் 150 இளைஞர்களும், பெரியோர்களும் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலைச் சென்று அடையும் பிரதான வீதியைத் திருத்தி அமைத்தனர்.

## உலகவங்கி நிபுணர்கள் விஜயம

யாழ்ப்பாணம், சனி

உலகவங்கி நிபுணர்களானடாக்டர் மஸ்கெற்றும் திரு. சின்னியாரும் கொழும்பு கடற்ருெழிற் கூட்டுஸ்தாபன பிரதம சிவில்என்ஜினியர் திரு. எறிக் பெர்ஞண்டோவுடன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தனர். மீன்பிடிக்கூட்டுஸ்தாபன யாழ்ப்பாணக்கிளை முகாமையாளர் திரு. திரு பாலசிங்கம் அவர்களைக்கூட்டிச்சென்று தொண்டைமாஞறு, ஊர்காவற்றுறை கரையூர் ஆகிய இடங்களைக் காண்பித்தார்.

---

## கதாப்பிரசங்கம

நாவற்குழி சித்திவினுயகர் இந்து வாலிபர் சங்க ஆதரவில் இன்றிரவு 6-30க்கு சங்கத்தலைவர் திரு. க. வேலுப்பிள்ளை தலைமையில் நாயன்மார்கட்டு திரு. சாம்பசிவக்குருக்கள் 'விஞயகர் பெருமை' என்னும்பொருள் பற்றி கதாப்பிரசங்கம்செய்வார்.

---

யாழ். மாநகரசபைக்கு

# 'இனியும் தாமதமின்றி தேர்தல் நடத்துக!'

## திரு. துரையப்பா கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குப் புதிய தேர்தல் விரைவில் நடத்தப்போவதாக உள்ளூராட்சி அமைச்சரும் உதவிஅமைச்சரும் செனட்சபையிலும் ஜனப்பிரதிநிதிகள் சபையிலும் வாக்குறுதியளித்திருந்த போதிலும், யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு புதிய தேர்தல் நடத்துவதற்கு இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாதது ஏன் என்பதுதான் விளங்கவில்லை" என்று யாழ்ப்பாணம் முன்னுள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா பிரதமமந்திரிக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கேட்டிருக்கிருர்.

புருேனியிலிருக்கும் திரு. துரையப்பா தாம் முன்னர் எழுதியகடிதத்தையும்குறிப்பிட்டுவிட்டு மீண்டும்தம்மை நீதிமன்றத்தில்உள்ளூராட்சி அமைச்சருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு யாழ்ப்பாணப் பொது மக்கள் கோரிய போதிலும் பிரதமர் மீது நம்பிக்கை வைக்குமாறு அவர்களைத் தாம் கேட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இனியும் தாமதமின்றியாழ்ப்பாணமாகரசபைக்கு புதிய தேர்தல் நடத்த உத்தரவிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கும்படி பிரதமரை அவர் கேட்டுள்ளார்.

---

## சுகாதாரவாரம்

### கொண்டாடத்தீர்மானம்

மானிப்பாய், வெள்ளி

மக்கள் சுகாதாரவாரம் கொண்டாடுவது சம்பந்தமாக ஓர் ஆலோசனைக் கூட்டம் மானிப்பாய் வைத்திய அதிகாரி காரியாலயத்தில் டாக்டர் எஸ். சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

சுகாதாரவாரத்தை செயற்படுத்தும் நோக்கத்துடன் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் டாக்டர். எஸ் .சின்னத்தம்பி, உபதலைவர்கள் திருவாளர்கள்எஸ். ராஜேந்திரன், எஸ் மார்க்கண்டுசி .க திருச்சிற்றம்பலம்.

கிளைக் காரியதரிசிகள் திருவாளர்கள்ரீ. ஹண்ட்எஸ். ஏ. யோசேப், பொருளாளர்திரு என். குமாரசாமி. நிர்வாக சபைஉறுப்பினர் திருவாளர்கள் ஏ. ஏ. ஜோன், ரீ. எஸ், சண்முகநாதன், எஸ், யோகேந்திரன்

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

திருக் குறிப்பு தொண்டர் சபையினரின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் [illegible] திகதி [illegible] பிற்பகல் 4 மணிக்கு புத்தூர் ஸ்ரீ பெரியதம்பிரான் கோவிலடியில் திரு. க. கதிர்காமு தலைமையில் நடைபெறும்.

## எம். பி. நடவடிக்கை

கிளிநொச்சி, வெள்ளி

உள்நாட்டு இறைவரி திணைக்களம்அனுப்பும் கடித உறையில் சிங்களத்தில் மட்டும் பெயர்பொறிக்கப்பட்டிருப்பதால் இதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள முடியவில்லை என்று உருத்திரபுரம் மேற்கு தமிழரசுக் கட்சிக் கிளை கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்துக்கு முறையிட்டதைத் தொடர்ந்து, விரைவில் தமிழிலும்கடிதஉறை வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளரைக் கடிதமூலம் கேட்டுள்ளார்.

பொதுமக்கள் மோட்டார் லைசென்ஸ் கோரி தமிழில் எழுதியனுப்பும் விண்ணப்பங்களுக்கு காலதாமதமாகவே பதில்கிடைக்கிறதெனவும் பொதுமக்கள் பலர் கிளிநொச்சி எம். பி. யிடம் முறையிட்டனர். இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்குமாறு போக்கு வரத்து ஆணையாளருக்கு எம். பி. எழுதியுள்ளார்.

---

## யாழ்ப்பாணத்தில்.....

1-ம் பக்கத் தொடர்ச்சி

பல இடங்களில் போக்கு வரத்து ஸ்தம்பிதமாயிற்று. யாழ்ப்பாணம் பஸ் நிலையம் வெள்ளக்காடாகக் காட்சியளித்தது.

சுகாதார அத்தியட்சகர் அலுவலகத்தின்மீது மரம் ஒன்று சரிந்து விழுந்ததால் ஓடுகள் சேதமுற்றதோடு அங்கிருந்தசில முக்கிய தஸ்தாவேஜுகள்நனைந்துபோனதாகவும் அறியப்படுகிறது.

ஆஸ்பத்திரி துணிக்களஞ்சிய அறைகள் வெள்ளம் நிறைந்துவிட்டது.

மனநோயாளர் விடுதிகட்டுவதற்காக அரிந்து வைக்கப்பட்ட புதிய சிமெந்துக் கற்கள் சேதமடைந்துள்ளன.

## தென்இலங்கையில்

தென்இலங்கையில் இப்போது மழைஓய்ந்து வருகிறது. பல இடங்களில்வெள்ளம் வடிந்தோடி வருவதாகவும் பாடசாலை, ஆலயங்கள் ஆகியனவற்றில் தஞ்சம் புகுந்துள்ளவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்புவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் இன்னும் ஓரிருதினங்களில் நிலைமை சீரடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## குத்திக்காயப் படுத்தியதாகப் புகார்

காரைநகர், வெள்ளி

காரைநகரைச் சேர்ந்த ம. நடராசா, ம. தியாகராசா ஆகிய இருவரையும் இ. சுப்பனும் அவரது சகோதரர்களும் குத்திக்காயப்படுத்தியதாக ஊர்காவற்றுறை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தியாகராசாவின் நிலைமை மோசமடைந்திருந்ததால் உடனடியாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டார் எனத் தெரியவருகிறது.

இச்சம்பவம் சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை யெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வழிபாடு

## ஒய்வு சாத்திய மில்லை

### மந்திரி அறிவிப்பு

கிளிநொச்சி, வெள்ளி

இந்து அரசாங்க ஊழியர்களுக்கு மத வழிபாட்டிற்காக இரண்டு மணித்தியால ஒய்வு வழங்கவேண்டுமென பல அரசியல் கட்சிகளும் சங்கங்களும் கோரி வந்தது தெரிந்ததே.

இது சம்பந்தமாக கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் ஒரு பிரேரணையை அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கொண்டு வந்த பொழுது அரசாங்கம் அதனை கவனிக்குமென உள்நாட்டு அமைச்சர் திரு. தஹநாயக்கா உறுதியளித்திருந்தார். இதனைத் தொடர்ந்து திரு. இரத்தினம் அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் இந்து மத வழிபாட்டிற்கான அனுமதியை விரைவில் வழங்கும்படி கோரியிருந்தார்.

தற்பொழுது நடைமுறையிலிருக்கும் தேவைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து அதனை மாற்றியமைக்க விரும்பவில்லையென்று திரு. தஹநாயக்கா திரு இரத்தினத்திற்கு அண்மையில் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

---

## "கைத்தொழில் புரட்சி வேண்டும"

உடுப்பிட்டி, வெள்ளி

"நாட்டிலே வேலையில்லாத்திண்டாட்டம் தோன்றியிருப்பதற்குக்காரணம் படித்த இளைஞர்களின் அசிரத்தையேயாகும். படித்த இளைஞர்கள் அரசாங்கஉத்தியோகங்களை நம்பியிராது கைத்தொழிலில்ஈடுபடவேண்டும். வசதியுள்ள இளைஞர்கள் கைத்தொழில் ஸ்தாபனங்களைக் கூட்டுறவுமுறையில் நடாத்த முன்வந்தால்வேலைவாய்ப்பும், பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படமுடியும். அரசியற்புரட்சியைவிட கைத்தொழிற் புரட்சி மூலமே நாடுமுன்னேறும்" என்று திரு. ஏ. தேவச்சந்திரன்நெல்லியடியில் மாணவர் மன்றக்கூட்டமொன்றில் கூறினுர்.

இக்கூட்டத்திற்கு திரு. கே. எஸ். இராசசிங்கம் தலைமை வகித்தார். ஆசிரியர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் மற்றும் திருவாளர்கள் இராசையா, அருட்செல்வம், ஆறுமுகம் ஆகியோரும் பேசினர் செயலாளர். திரு. ஜே. ஜெயக்குமார் நன்றிகூறினுர்.

## மரணஅறிவித்தல்

இ. போ. ச. யாழ்ப்பாணம் மேற்குடிப்போவைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை இராசரத்தினம் அவர்களின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களின் அருமை மனைவியாரும், சபாரத்தினம் சபாலிங்கம், திருமேனி ஆகியோரின் சகோதரியுமாகிய **தங்கச்சிப்பிள்ளை** வெள்ளிக்கிழமை [12-5-67] காலமாஞர். இவரினது ஈமைக்கிரியைகள் சனிக்கிழமை [13-5-67] பிற்பகல் மண்டைதீவில்நடைபெறும். இத்தகவலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். க. இராசரத்தினம், மண்டைதீவு. 2395

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு மே மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யாழ் - அரசினர் வைத்தியசாலை
மனநோயாளர் கட்டிட நிதிக்காக
இன்னிசைக் கச்சேரி
யாழ்ப்பாணம்
லயன்ஸ் கிளப்பின்
ஆதரவின்கீழ்
கானசரஸ்வதி
D.K.பட்டம்மாள்
மிருதங்க வித்துவான்
சங்கீத கலாநிதி
பாலக்காடு மணி
14-5-67 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6-15 மணி
யாழ்ப்பாணம்
திறந்தவெளி அரங்கில்
நடைபெறும்.
[விசேஷ பஸ் போக்கு வரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது]
டிக்கட் விபரம்:- ரூ. 25/- ரூ. 10/- ரூ. 5/-
177

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org